## 4. SGSY

### 4.1 பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்திற்கான வழிகாட்டி நெறிமுறைகள் (1999–2000)

ஊரக வளர்ச்சி (ஒ.ஊ.வ.தி) துறை

அரசாணை (நிலை) எண். 137 நாள் : 21. 07.1999

படிக்க :

1) ஊரக வளர்ச்சி (தி2) துறையின் அரசாணை (நிலை) எண்.247, நாள்.07.08.1997
2) மத்திய அரசின் ஊரக பகுதிகள் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் செயலரின் நேர்முகக் கடித எண்.17011/2/99/ஒஊவ/III, நாள்.15.04.1999
3) மத்திய அரசின் ஊரக பகுதிகள் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் இணை இயக்குநரின் கடித எண்.17012/1/99/ ஒஊவ/I, நாள்.19.05.1999.
4) மத்திய அரசின் ஊரக பகுதிகள் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் ஊரக வளர்ச்சித் துறையின் கடித எண்.25011/3/99/ ஒஊவ/III(IRD Division), நாள்.26.05.1999.
5) மத்திய அரசின் ஊரக பகுதிகள் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின்இணைச்செயலரின் நேர்முக கடித எண்.17011/2/99/ ஒஊவ/III, நாள்.28.05.1999.
6) மத்திய அரசின் ஊரக பகுதிகள் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் ஊரக வளர்ச்சித் துறையின் கடித எண்.ஆர்.17011/6/99/ ஒஊவ/II(SGSY), நாள்.02.06.1999.
7) ஊரக வளர்ச்சித்துறை செயலரின் மத்திய அரசின் ஊரக பகுதிகள் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் இணை இயக்குநருக்கு எழுதப்பட்ட நேர்முகக் கடித எண்.16888/ஒஊவதி/99–2, நாள்.17.06.1999.
8) ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடித எண்.32613/99/ஒஊவதி/நாள்.25.06.1999.
9) ஊரக வளர்ச்சிஇயக்குநரின் கடித எண்.32613/99/ஒஊவதி/நாள்.05.07.1999.

**ஆணை**

மாநில அரசின் பங்குடன் செயல்படுத்தப்பட்ட மத்திய அரசுத் திட்டங்களான ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கிராமப்புற இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்பு பயிற்சித் திட்டம், கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம், கிராமப்புற கைவினைஞர்களுக்கு மேம்படுத்தப்பட்ட கருவிகள் வழங்கும் திட்டம், கங்கா கல்யாண் திட்டம், மில்லியன் கிணறுகள் திட்டங்களை 31.03.1999 அன்றிலிருந்து நீக்கி, இத்திட்டங்களை இணைத்து 01.04.1999 முதல் மத்திய அரசு புதிய பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.

2. இப்புதிய திட்டத்திற்கான வழிகாட்டி நெறிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், ஊரக பகுதிகளில் உள்ள வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களை, வறுமைக் கோட்டிற்கு மேல் மூன்று வருடங்களில் அவர்களுக்கு வருவாய் பெறக்கூடிய வகையில் வணிகக் கடன் மற்றும் அரசு மானியம் மூலமாக சொத்துக்களை ஏற்படுத்துவதாகும். அதாவது, ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு மாதமும் குறைந்தது ரூ.2,000/– ரூபாயை வருமானமாக பெற வேண்டும் என்பதாகும். அடுத்த ஐந்து வருடங்களில் ஒவ்வொரு வட்டாரத்திலும் குறைந்தது 30 சதவீதம் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படும்.

3. இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாக கீழ்கண்டவாறு மத்திய அரசு அறிவித்துள்ளது.–

கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம் சுய வேலைவாய்ப்பில் குறிப்பாக வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள ஊரக மக்கள் அவர்களாகவே சுய உதவிக்குழுக்களாக அமைத்துக் கொண்டு, கட்டிடங்கள் கட்டுதல், திட்டமிடுதல், அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல், கடன் வசதி மற்றும் பொருட்கள் விற்பனை போன்ற எல்லா அம்சங்களிலும் முன்னேற்றம் பெறுவதை உள்ளடக்கியதாக இருக்கும்.

ஒவ்வொரு மாவட்டமும், அம்மாவட்டத்தில் உள்ள ஆதாரங்களை முழுமையாக பயன்படுத்துவதற்கும், வறுமை ஒழிப்பதற்குமான திட்டத்தை தயாரிக்க வேண்டும். இது ஒவ்வொரு வட்டாரத்திலும் நான்கு அல்லது ஐந்து குழுக்களை தேர்ந்தெடுத்து இதனடிப்படையில் செயலாக்கப்படும்.

ஒவ்வொரு மாவட்டமும் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கான பல்வேறு நடவடிக்கைகளுக்காக ஒரு திட்ட அறிக்கையை தயாரிக்க வேண்டும். இந்த திட்ட அறிக்கையில் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் ஈடுபடுத்தப்படவேண்டும்.

## 4. SGSY

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், சுய உதவிக்குழுக்கள் தன்னிச்சையாக இயங்குவதற்கு வழிவகுப்பதாகும். ஒவ்வொரு சுய உதவிக்குழுவிலும் பெண் உறுப்பினர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும். ஒரு வட்டாரத்தில் உள்ள குழுக்களில் குறைந்தது 50 சதவிகிதம் பெண்களை மட்டுமே கொண்ட குழுக்களாக இருக்க வேண்டும்.

சுய உதவிக்குழுக்கள் இத்திட்டத்தின் கீழ் கடன் உதவி பெறுவதற்கு சில அடிப்படைத் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் சுய உதவிக்குழுக்களின் நடவடிக்கைகளுக்கே உதவி அளிக்கப்படும். இருந்தபோதிலும், மற்ற நடவடிக்கைகளுக்காக 25 சவிகிதம் உதவி அளிக்கலாம்.

சுய உதவிக்குழுக்களை அமைத்துக் கொள்வது, அந்த குழு உறுப்பினர்களின் தன்னார்வ நடவடிக்கையே ஆகும். எனவே, இதில், தேர்வு முறையே இல்லை. தனி பயனாளிகளைப் பொறுத்த வரையில் கிராம சபை தேர்வு செய்யும், சரியான தனிநபர் பயனாளிகளை தேர்வு செய்வதற்கு வங்கிகளுடன் கலந்தாலோசிப்பதும் பொருத்தமாக இருக்கும்.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் திறமையை நல்ல பயிற்சியின் மூலம் வளர்ப்பதும், மேம்படுத்துவதும் ஆகும். கடனை சரியான முறையில் பயனளிக்கத் தக்க வகையில் பயன்படுத்துவதற்காக, கடன் வழங்குவதற்கு முன் இத்தகைய பயிற்சி அளிக்கப்படும். அங்கீகரிக்கப்பட்ட தொழில்பயிற்சி நிலையங்கள், அனுபவம் வாய்ந்த கைவினைஞர்கள் போன்றவர்கள் மூலமாக இத்தகைய பயிற்சி அளிக்கப்படும் மாவட்ட ஊரகவளர்ச்சி முகமைகள் இத்தகைய பயிற்சி அளிப்பதற்காக 10 சதவிகிதம் நிதியை ஒதுக்கி “ கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம்–பயிற்சி நிதி” என்ற தலைப்பின் கீழ் பராமரிக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு பயிற்சி அளிப்பதற்கு எந்த வசதியும் இல்லையெனில் இத்தகைய வசதிகளுக்காகவும் இந்த நிதியை பயன்படுத்தலாம்.

பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதில் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் பங்கு வழங்கப்பட்ட கடனை திரும்பப் பெறுவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கை, வாங்கிய கடனை குறித்த காலத்தில் திருப்பி செலுத்துவதில் சுய உதவிக்குழுக்கள் காட்டும் அக்கறை ஆகியவற்றின் அடிப்படையில் இத்திட்டத்தின் கீழ் பயனாளிக்கு / பயனாளிகளுக்கு அளிக்கப்படும் கடன் வசதி ஒரு தடவை மட்டுமே எடுக்கப்படும் நடவடிக்கையாக இல்லாமல், பயனாளிகள் மேலும் கடன் வசதி பெறுவதற்கு ஏற்றவாறு ஊக்கப்படுத்துவதாகவும், அமைய வேண்டும்.

மானிய உதவி தனிப்பட்ட பயனாளிகளைப் பொருத்த வரையில் திட்ட மதிப்பீட்டிற்காக 30 சதவிகிதமாகவும், (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தவருக்கு 50 சதவிகிதம்) அதிகபட்சம் ரூ.7,500/– (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தவருக்கு ரூ.10,000 ஆகவும் இருக்கும்). குழு பயனாளிகளைப் பொருத்த வரையில் திட்ட மதிப்பீட்டில் 50 சதவிகிதம் அல்லது அதிகபட்சமாக ரூ.1.25 இலட்சம் வழங்குவது தொடரும், தனிநபர் அல்து சமுதாய சிறு பாசனத் திட்டங்களைப் பொருத்த வரை கங்கா கல்யாண் திட்டம் கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் இணைக்கப்பட்ட போதும், முன்பு இருந்ததைப் போலவே நிதிநிலையில் உச்சவரம்பற்ற நிலையே தொடரும். முதலீடுகளைப் பொருத்த வரை எந்த வரையறையும் இல்லை.

அடிப்படை கட்டமைப்பு வசதிக்காக இத்திட்டத்தின் கீழ் ஒரு மாவட்டத்திற்கு ஒதுக்கப்படும் மொத்த நிதியிலிருந்து அதிகபட்ச வரம்பான இருபது சதவிகிதத்திற்குள் மாவட்ட ஊரகவளர்ச்சி முகமைகள் செலவிடலாம். இந்த செலவீனத்தை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் “கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம், அடிப்படைக் கட்டமைப்பு நிதி” என்ற தலைப்பின் கீழ் பராமரிக்க வேண்டும். அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளின் தேவைகளுக்காக வங்கிகளுடன் இணைந்து திட்டமிடப்பட வேண்டும்.

தொழில்நுட்பத்தை மேம்படுத்துவது முக்கிய நோக்கமாகும். ஊரகப் பகுதிகளில் எரிசக்தி ஆதாரங்களை கண்டறிவதும், மலிவான மாற்று எரிசக்தி ஆதாரத்தை அளிப்பதும் இதில் அடங்கும்.

நிலத்தை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கைகளான தோட்டக்கலை, பூச்செடிகள் வளர்த்தல் போன்றவற்றில் ஈடுபடும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு சிறுபாசன வசதிகளை அளித்து இத்திட்டம் ஊக்கமளிக்கும். இத்திட்டம் திறந்த கிணறுகள் அமைப்பது மற்றும் நிலத்தடி நீரை முழுமையாக பயன்படுத்துவது ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும்.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கடன் வழங்குவதுதான். மானியம் அளிப்பது ஒரு சிறிய நடவடிக்கையே. எனவே, கடன் வழங்குவதற்கு முன்பு பயனாளிகளை தேர்வு செய்வதற்காகவும், வழங்கிய கடனை திரும்பப் பெறும் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காகவும் வங்கிகளுடன் இணைத்து திட்டமிடவேண்டும்.

வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் ஒவ்வொரு குடும்பத்தையும், இத்திட்டத்தின் கீழ் உதவி அளித்து மூன்று வருடங்களில் வறுமை நிலையிலிருந்து விடுவிப்பதே இத்திட்டத்தின் மிகமுக்கிய நோக்கமாகும்.

இருக்கும் நிதியின் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலும், அடுத்த ஐந்து வருடங்களில் குறைந்தது 30 சதவிகிதம் குடும்பங்களுக்கு உதவி அளிப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் கீழ் வறுமையை ஒழிப்பதற்காக எடுக்கப்படும் முயற்சிகளில் மகளிரே மையமாகக் கருதப்படுவார்கள். மகளிருக்கான ஒதுக்கீட்டில் முன்பு இருந்ததில் எவ்வித மாற்றமும் இல்லை. முன்பு குறிப்பிட்டுள்ளதைப் போல் 50 சதவிகிதம் சுய உதவிக்குழுக்கள் முழுவதுமாக பெண்களைக் கொண்டதாக இருக்கும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், உடல்ஊனமுற்றோருக்கான ஏற்பாடுகளும் தொடரும்.

கிராமப்புற கைவினைஞர்கள் அவர்களுடைய இயல்பான திறமையை வெளிப்படுத்தி வறுமையிலிருந்து மீண்டு வருவதற்கு வகை செய்வதும் இத்திட்டத்தின் மற்றொரு முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் கிராமப்புற கைவினைஞர்கள் கருவிகள், மூலப் பொருட்கள், வாங்கி அவர்களது அன்றாட தொழில் மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஊக்குவிக்கப்படுவார்கள்.

இத்திட்டம் மாவட்டங்களில் உள்ள வங்கிகள், நிதி நிறுவனங்கள், கிராம ஊராட்சி அமைப்புகள், தன்னார்வமிக்க அமைப்புகள் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து ஊரக வளர்ச்சி முகமைகளால் செயல்படுத்தப்படும்.

இத்திட்டம், பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு முன்னுரிமை அளிக்கும்.

இத்திட்டத்திற்கான நிதியை மத்திய அரசும், மாநில அரசும் 75:25 என்ற சதவிகிதத்தில் பகிர்ந்து கொள்ளும்.

மத்திய அரசு வறுமை நிலைகளின் அடிப்படையில் தற்போது உள்ள நடைமுறைப்படி இத்திட்டத்திற்கான நிதியை அளிக்கும். இதற்காக சிறப்பு காரணங்களையும் மத்திய அரசு கவனத்தில் கொள்ளும்.

4. பார்வை நான்கில் குறிப்பிட்டுள்ள கடிதத்தில் மத்திய அரசு இத்திட்டத்திற்காக இம்மாநிலத்திற்கு மொத்த நிதி ரூ.6132.52 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், இதில், மத்திய அரசின் பங்கு ரூ.4599.39 இலட்சம் (75%) என்றும், மாநில அரசின் பங்கு ரூ.1533.13 இலட்சம் (25%)என்றும் தெரிவித்துள்ளது. மேலும், இந்த ஒதுக்கீடுக்கு ஏற்றவாறு, மத்திய, மாநில அரசுகளின் பங்கு விகிதம் **75:25** என்ற அடிப்படையில் மாநில அரசின் பங்காக விடுவிக்கப்பட வேண்டிய நிதிக்கு மாநில அரசின் வரவு செலவு திட்டத்தில் வகை செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

5. பார்வை ஆறில் குறிப்பிட்டுள்ள கடிதத்தில் மத்திய அரசு இத்திட்டத்தை 1999–2000ம் ஆண்டில் செயல்படுத்துவதற்காக, மத்திய அரசின் நிதியில் முதல் தவணையாக ரூ.2299.695 இலட்சத்தை 28 மாவட்டங்களுக்கும் பகிர்ந்து விடுவித்துள்ளது. மாவட்ட வாரியாக மத்திய அரசின் நிதிக்கு இணையாக, மாநில அரசின் பங்காக 25 சதவிகித நிதி ஊரக வளர்ச்சி இயக்குநரால் விடுவிக்கப்பட வேண்டும்.

6. இத்திட்டத்தை 1999–2000ம் ஆண்டு முதல் செயல்படுத்துவதற்கான கருத்துரு ஊரக வளர்ச்சி இயக்குநரிடம் கேட்கப்பட்டது. பார்வை ஒன்பதில் உள்ள கடிதத்தில் ஊரக வளர்ச்சி இயக்குநர் அரசுக்கு அனுப்பிய கருத்துருவை அரசு கவனமாக ஆராய்ந்து கீழ்கண்டவாறு ஆணைகள் வெளியிடுகிறது.

(1) (i) கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1999–2000 ஆண்டிற்காக மத்தியஅரசின் இம்மாநிலத்திற்காக ஒதுக்கியுள்ள மொத்த நிதியான ரூ.6132.52 இலட்சத்தில், மத்திய அரசு அதன் பங்கு 75 சதவிகிதமும், ரூ.4599.39 இலட்சமும், மாநில அரசின் 25 சதவிகிதப் பங்கு ரூ.1533.13 இலட்சமும் ஆகும். மத்திய அரசின் பங்கான ரூ.4599.39 இலட்சத்தில் முதல் தவணையாக ரூ.2999.695 இலட்சத்தை மத்திய அரசு விடுவித்துள்ளது. எனவே, மேற்படி திட்டத்திற்காக மாநிலஅரசின் 25 சதவிகிதப் பங்காக ரூ.1533.13 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். ஆனால், மாநில அரசின் 1999–2000 ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் மத்திய அரசால் இப்புதிய திட்டத்திற்காக ஒருங்கிணைக்கப்பட்டு 31.03.1999லிருந்து நிறுத்தப்பட்டுவிட்ட கீழ்கண்ட திட்டங்களுக்காக, மாநில அரசின் வரவு, செலவு திட்டத்தில் மொத்தமாக ரூ.5133.66 இலட்சம் கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை மொத்தமாக ஒருங்கிணைத்து, பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத் தலைப்பின் கீழ் செலவிடுவதற்கு ஏதுவாக தற்போதுள்ள 2501–ஊ.வ.திட்டங்கள்–01–ஒ.ஊவ.திட்டம்–800 ஏனைய செலவு II மாநிலத் திட்டத்தின் கீழ் உள்ள துணைத் தலைப்பு “JB ஒருங்கிணைந்த ஊ.வ.திட்டம்” என்பதனை “JB பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம்” என திருத்தியமைத்து ஆணையிடுகிறது.

## 4. SGSY

**1. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.** **ரூபாய் இலட்சத்தில்**

அ. 2501–ஊரக வளர்ச்சி சிறப்புத் திட்டங்கள் 01–ஒஊவதி–789–
ஆதிதிராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம்– II மாநிலத் திட்டம்
JB- சிறப்புக்கூறுகள் திட்டத்தின் கீழ் ஒ.ஊ.வ.திட்டம்–09 உதவி மானியங்கள்
(2501–01–789– JB –09) ரூ.1801.14

ஆ. 2501–ஊரக வளர்ச்சி சிறப்புத் திட்டங்கள் 01–800–ஏனைய செலவு
II மாநிலத் திட்டம் JB - ஒ.ஊ.வ.திட்டம்–09 உதவி மானியங்கள்
(2501–01–789– JB –0906) ரூ.1801.14

**2. கிராமப்புற இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பிற்காக பயிற்சி அளிக்கும் திட்டம் (டிரைசம்)**

அ. 2501–ஊரக வளர்ச்சி சிறப்புத் திட்டங்கள் 01–ஒஊவதி–789–
ஆதிதிராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம்– II மாநிலத் திட்டம் JA-
சிறப்புக்கூறுகள் திட்டத்தின் கீழ் சுய வேலைவாய்ப்பிற்காக கிராமப்புற
இளைஞர்களுக்கு பயிற்சியளித்தல்– 09 உதவி மானியங்கள்
(2501–01–789– JA –0902) ரூ.61.00

ஆ. 2501–ஊரக வளர்ச்சி சிறப்புத் திட்டங்கள் 01–789–ஒ.ஊ.வ.
திட்டங்கள்–003–பயிற்சி–II மாநிலத் திட்டம் JA – சுய வேலைவாய்ப்பு
பயிற்சி திட்டத்தில் இளைஞர்களுக்கு பயிற்சியளித்தல்–09 உதவி
மானியங்கள் (2501–01–789– JA –0906) ரூ.248.62

**3. கிராமப்புற இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பிற்கு பயிற்சி அளிப்பதற்கான ஆதார வசதிகள் மேம்பாடு (டிரைசம்)**

2501–ஊரக வளர்ச்சி சிறப்புத் திட்டங்கள் 01–ஒ.ஊ.வ.திட்டம்–003–
பயிற்சி–VI மத்திய மாநில அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்– UA –
சுய வேலைவாய்ப்பில் ஊரக இளைஞர்களுக்கு பயிற்சி –09 உதவி
மானியங்கள் (2501–01–789– UA –0905) ரூ.190.80

**4. கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்.**

அ. 2501–ஊரக வளர்ச்சி சிறப்புத் திட்டங்கள் 01–ஒஊவ திட்டம்–800–
ஏனைய செலவு– II மாநிலத் திட்டம் JA – ஒ.ஊ.வ.திட்டத்தின் கீழ் ஊரகப்
பகுதிகளில் மகளிர்–சிறார் மேம்பாடு–09 உதவி மான்யங்கள்
(2501–01–789– JA –0906) ரூ.384.67

ஆ. JF ஊரகப் பகுதிகளில் மகளிர் குழந்தை நல மேம்பாட்டுத் திட்டத்தின்
கீழ் தகவல் கல்வி தகவல் தொடர்பு திட்டப் பணிகள் 09–உதவி
மான்யங்கள்(2501–01–789–JF–0906) ரூ.11.00

இ. JG ஊரகப் பகுதிகளில் மகளிர் குழந்தை நல மேம்பாட்டுத் திட்டத்தின்
கீழ் குழந்தை நல பாதுகாப்பு நடவடிக்கைகள் 09–உதவி மான்யங்கள்
(2501–01–789–JG–0904) ரூ.11.00

**5. கங்கா கல்யாண் திட்டம்.**

2501–ஊரக வளர்ச்சி சிறப்புத் திட்டங்கள் –01–ஒ.ஊ.வ.திட்டம்–800–
ஏனைய செலவு II - மாநில திட்டம் JH – கங்கா கல்யாண் திட்டத்தை
செயல்படுத்துதல் 09– உதவி மான்யங்கள் (2501–01–789– JH –0902) ரூ.64.49.

**6. மில்லியன் கிணறுகள் திட்டம்.**

2501–ஊரக வேலைவாய்ப்பு 01–தேசீய திட்டங்கள்–702–ஐ.வே.வா.திட்டம்
II - மாநிலத் திட்டம் – JF பத்து இலட்சம் கிணறுகள் தோண்டும் திட்டம்–09
உதவி மான்யங்கள் (2501–01–789– JF –0900) ரூ.186.36

2501–ஊரக வேலைவாய்ப்பு –தேசிய திட்டங்கள்–789–சிறப்புக் கூறுகள்
திட்டம் II - மாநிலத் திட்டம் – JC சிறப்புக் கூறுகள் திட்டத்தின்
கீழ் பத்து இலட்சம் கிணறுகள் தோண்டும் திட்டம்–09 உதவி மான்யங்கள்
(2501–01–789– JC –0904) ரூ.373.44

**மொத்தம்** **ரூ.5133.66**

(ii) முன்பத்தி (i)ல் உள்ள ஆணையை செயல்படுத்துவதற்காக உரிய கருத்துருவை நிதி (வரவு–செலவு-I) துறைக்கு அனுப்புமாறு ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**(2)** மத்திய அரசு திட்டங்கள் தொடர்பாக மாநில அரசின் பங்குத் தொகையை விடுவிக்க ஏற்கனவே பார்வை **1–**ல் உள்ள அரசாணையில் ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு சில மத்திய திட்டங்களுக்காக விடுவிப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது போலவே, பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழும் மாநில அரசின் பங்குத் தொகையை விடுவிக்க இந்த ஆணையில் குறிப்பி ட்டு இருக்கும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் அளித்து ஆணையிடுகிறது.

**(3)** (i) **01.04.1999** முதல் செயல்படுத்தப்படும் புதிய திட்டமான பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்திற்காக, **31.03.1999** முதல் மத்திய அரசால் நிறுத்தப்பட்டு, ஒருங்கிணைக்கப் பட்டுள்ள ஆறு திட்டங்களான ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கிராமப்புற இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்பு பயிற்சித் திட்டம், கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம், கிராமப்புற கைவினைஞர்களுக்கு மேம்படுத்தப்பட்ட கருவிகள் வழங்கும் திட்டம், கங்கா கல்யாண் திட்டம் மில்லியன் கிணறுகள் திட்டம் போன்றவற்றில் **31.03.1999** அன்று முடிய மாவட்டங்களில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஏனைய பிற அலுவலகங்கள் ஆகியவற்றில் முடிவு இருப்பாக உள்ள நிதியனைத்தையும், ஒன்று சேர்த்து பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஆரம்ப இருப்பாக எடுத்துக் கொள்வதற்கு அரசு ஆணையிடுகிறது.

(ii) முன்பத்தி (i)ல் உள்ள ஆணையை செயல்படுத்துவதற்காக உரிய கருத்துருவை நிதி (வரவு செலவு–I) துறைக்கு அனுப்புமாறு ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**4.** மேலும், மத்திய அரசு இத்திட்டத்திற்காக வெளியிட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளில் "இயல் VIII செயலாக்கம்" என்ற தலைப்பின் கீழ் பத்திகள் பத்தி **8.10**ல்இத்திட்டத்திற்காக மாவட்ட அளவிலான குழுவையும், பத்தி **8.11**ல் மாவட்ட அளவிலான குழுவையும், பத்தி **8.12**ல் மாநில அளவிலான குழுவையும் அமைத்துள்ளது.

**5.** இந்த குழுக்களை அமைத்து அரசு ஆணையிடுகிறது. இந்த குழுக்கள் வழிகாட்டு நெறிமுறைகளில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு இயங்க வேண்டும்.

**6.** இந்த ஆணை நிதித் துறையின் அ.சா.எண்.2636/FS/P/99 நாள்.**15.07.99** ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்